# "உண்மையின் ஒளி ஓங்குக"

இனிய நண்பர்களே !

இதோ தாங்கள் வைத்திருப்பது-படிப்பது **இம்மாத இதழல்ல.** கடிதம் ! எண்ணமெனும் சுண்ணம் கொண்டு தீட்டி மாதந்தோறும் வெளிவந்த பூச்செண்டு இன்று அஞ்சல் வடிவாகத் தங்கள் கரங்களில் கொலுவிருக்கக் காரணம் முன்னர் கூறியது போன்ற பணமுடையல்ல.

காலமுடை காரணத்தால் சற்று காலம் தாழ்த்தி இதழினைக்கொணர முடிவு செய்துள்ளோம். பூச்செண்டு இன்னும் வரவில்லையே என்று ஏக்கத்தோடும் கோபத்தோடும் எழுதும் வாசக அன்பர்களின் கடிதங்கள் எங்கள் இமைகளை நனைக்கின்றன! **பாசமுள்ள இடத்தில் தானே கோபமும் ஏக்கமும் !** பூச்செண்டின் பால் தாங்கள் கொண்டுள்ள அன்பு எங்களை மெய்சிலிர்க்க வைக்கின்றது. அதற்காக எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

**காரிருள் சூழ்ந்த இரவின் உறக்கத்திற்கு பின்புதானே புத்தம் புதுவொளி வீசி பறவைகள் இதைப் பாடும் பொன்னிற காலைப்பொழுது மலர முடியும்! இனிய பகற்பொழுது விடிய தடுக்க முடியாத அந்த இரவு எப்படி அவசியமோ, அப்படியே எழுச்சி மிக்க புத்தம் புதிய ஆற்றல் மிக்க இனிய பூச்செண்டை உருவாக்க சற்று இடைவெளி தடுக்க முடியாததாகிறது.** மேலும், முற்றிலும் நாங்கள் மாணவர்கள் என்ற நிலையில் இறுதித் தேர்வுகளின் படையெடுப்புக்களுக்கு தயார் செய்ய வேண்டி பெருமளவு நேரத்தை செலவிட வேண்டிய நிலை. புதிய பூச்செண்டின் அடித்தளத்தை வண்மையாக அமைத்துக்கொண்டு சென்ற திங்கள் மதுரைமாநகரில் நடைபெற்ற பூச்செண்டு செயற்குழு கூட்டத்தில் உருவான இலட்சிய முழக்கங்களோடும், புது மிடுக்கோடும் ஜூன்மாதம் 1ம் தேதி பூச்செண்டு உங்கள் கரங்களில் தவழும். இது உறுதி!

நீங்கள் இனி காணப்போகும் பூச்செண்டு ஒளிமிக்க புதிய

சமுதாயத்தை உருவாக்கப்போகும் ஒரு பேரெழுச்சியாக இருக்கும் !

அதிகப் பக்கங்கள் ! ஏராளமான படங்கள்!

மாறுபட்ட புதிய அச்சமைப்பு! படிக்க படிக்க உணர்வூட்டிடும் செய்திகள் !

வெறும் வாய்வாக்கு மொழிகளை அடுக்கிக்கொண்டே போய் ஏமாற்றுவதற்கு நாங்கள் அரசியல் வாதிகளல்ல. செயலிலே காட்ட விரும்புகிறோம். [செயலில் காட்டாத வரை, இந்த எழுத்துக்களால் மட்டும் உங்களை திருப்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இல்லை. எனவே அதிகம் எழுத விரும்ப வில்லை]

நாங்கள் எடுத்துக் கொள்ளும் இந்தக்கால இடைவெளி எங்களை முழுமையாக உணர்ந்து எங்களைத் தயார்படுத்திக் கொள்ள உதவும் காலமாகக் கொள்கிறோம்.

நண்பர்கள் இந்தப்பிரிவினை வரவேற்று, பூச்செண்டின் நன்மைக்காக நாங்கள் எடுத்துள்ள இந்த முடிவை ஆதரித்து ஊக்குவிப்பார்கள் என முழுமையாக நம்புகிறோம்.

**ஜூன்-1-தேதி மீண்டும் சந்திப்போம்**

என்றும் உங்கள்,

**'பூச்செண்டு'**

**(ஆசிரியர் குழு)**

*1-3-70*

பதிப்பாளரும் ஆசிரியரும் : சு. இராசேந்திரன், எம்.ஏ., 19, நௌரோசி வீதி
சென்னை-31. அச்சிடுபவர் ; வில்லியம் பொர்ணண்டஸ், ரெக்ஸ் டிரேடிங்

பூச்செண்டு

முகவரி

நௌரோசி வீதி,
ன்னை—31.

| இ.ஜே.சுந்தர், ( பூச்செண்டு, சுட்டி இதழ்களின் நடத்துநர்) |
| --- |

16.03.13

அன்புள்ள நண்பர் திரு நசன் அவர்களுக்கு,
வணக்கம். நீங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய 105 சுட்டி இதழ்கள் அடங்கிய குறுந்தகடு கிடைத்தது. அது நீங்கள் எனக்குப் பெரும் சொத்தை வழங்கிய மகிழ்வை அளித்தது. விடப்பட்ட இதழ்கள் 1,4,35 ஆகியனவற்றை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

இத்துடன் உள்ள பூச்செண்டு இதழ்கள் நான் தலைமையேற்று நடத்தியவை. மார்ச்1968 முதல் டிசம்பர் 1970 வரை 25 இதழ்கள் அத்தனையும் இத்துடன் அனுப்பியுள்ளேன். தமிழகத்தில் முதல் முறையாக மாணவர்களால் நடத்தப்பெற்ற பத்திரிகை அது. பேராசிரியர் இராஜேந்திரன் அவர்கள் நடத்தி நிறுத்திய பத்திரிகையை, கல்லூரி மாணவர்களாகிய நாங்கள் அப்போது ஏற்று நடத்தினோம். மிக மிகச் சிரமப்பட்டு 25 இதழ்களைக் கொணர்ந்தோம். தமிழகமெங்கும் உள்ள கல்லூரி மாணவர்களின் செயற்குழுவை அமைத்தோம்.

பூச்செண்டில் என்னோடு இணைந்து பணியாற்றிய தோழர்கள் இன்று இதழியல் துறையிலும் பிற துறைகளிலும் பெரும் சாதனைகள் புரிந்து வருகின்றனர். அவர்களில் சிலர்.. திரு. மாலன் புதிய தலைமுறை இதழ் ஆசிரியராக உள்ளார். திரு ஆதி குமணன், மலேசியாவின் புகழ்பெற்ற இதழாளர்; 'மலேசியா நண்பன்' நாளிதழின் தலைமையாசிரியராக இருந்து அண்மையில் மறைந்தார். திரு இளங்கோ, மலேசிய வார இதழ் நயனம் ஆசிரியர். திரு மெர்வின் வாழ்வியல் எழுத்தாளராக 80 நூல்களுக்கு மேல் எழுதி வருகிறார். திரு இரத்தினம், சுட்டி இதழின் வெளியீட்டாளராக இருந்து இன்று சமூக நீதிக்காகப் போராடும் புகழ்பெற்ற வழக்கறிஞராக உள்ளார். திரு வெங்கடரமணி, டில்லி உச்சநீதி மன்றத்தில் மூத்த வழக்கறிஞராக உள்ளார். டாக்டர்

கலைக்கோவன், திருச்சியில் புகழ்பெற்ற கண்மருத்துவராகவும், *வரலாற்று* ஆய்வாளராகவும் விளங்கி வருகிறார். இப்படிப் பலர். இவர்கள் அனைவரையும் இளமைக்காலத்தில் செதுக்கிய இதழ் பூச்செண்டு. அவர்கள் இந்நிலைக்கு உயர பூச்செண்டின் பங்களிப்பு நிச்சயம் உண்டு என்பதால் அவர்கள் பூச்செண்டை மறக்க மாட்டார்கள்.

தங்கள் இதழ் பட்டியலில் பூச்செண்டு மார்ச் 1969 இதழ் மட்டுமே உள்ளது. இப்போது அனைத்து இதழ்களையும் அனுப்பியுள்ளேன். வேறு படிகள் யாரிடமும் இல்லை. எனவே பாதுகாப்போடு படியெடுத்து வரலாற்றில் பதிவு செய்ய வேண்டுகிறேன். தங்கள் முயற்சி அளப்பரியது; இதன் தாக்கம் நாளைய தலைமுறைக்குத்தான் புரியும்.

பூச்செண்டு இதழ்களைப் படியெடுத்தபின், குறுந்தகடுடன் திருப்பியனுப்ப முடிந்தால் மகிழ்வேன். பூச்செண்டு இதழை 42 ஆண்டுகளுக்குப்பின் பார்க்கும் வாசகர்களும், ஆசிரியர் குழுவினரும் எல்லையற்ற வியப்பும், மகிழ்ச்சியும் அடைவர். அந்தப் பெருமை உங்களையே சாரும்.

தங்களின் பணிக்கு எவ்வகையிலும் உதவ நான் கடமைப்பட்டுள்ளேன். இத்துடன் நான் ஓய்வுபெற்றபின் செய்துவரும் பணிபற்றிய விவரமும் அனுப்பியுள்ளேன். இதுவரை 16,000 தலைப்புகளில் எழுதியுள்ளோம். இந்த ஆண்டு தமிழ்க் களஞ்சியம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாங்கள் அனுப்பிய அட்டைகளுக்கு மிக்க நன்றி. விரைவில் என் அமெரிக்கத் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்க இவை எனக்கு மிகவும் பயனாகும்.

அன்புடன்,

[signature]